
# 08 இயற்கை அனர்த்தங்களும் அவை சார்ந்த ஆபத்து நிலைமைகளை முகாமை செய்தலும்




**இப்பாடத்தைக் கற்பதன் மூலம் உங்களால்,**


- வெள்ளப் பெருக்கு, மண்சரிவு ஆகியவற்றிற்கான விஞ்ஞான அடிப்படையிலான காரணிகளை விளங்கிக்கொள்வதற்கும்
- வெள்ளப் பெருக்கு, மண்சரிவு ஆகியவற்றால் ஏற்படும் ஆபத்து நிலைமைகளை முகாமைத்துவம் செய்வதற்கும்

**தேவையான தேர்ச்சிமட்டங்களை அடைய முடியும்.**

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாகப் பத்திரிகைச் செய்திகளைச் சேகரிக்கும்படி வகுப்பறையின் விஞ்ஞான வட்டத்தினர் வருட ஆரம்பத்தில் ஏனைய மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். அதற்கமைய அந்த மாணவர்களால் பல அறிக்கைகளை ஒன்றிணைத்து வடிவமைக்கப்பட்ட ஒப்படையின் ஒரு பகுதி முற்பக்கத்தில் காணப்படுகின்றது. அங்கே காணப்படுகின்ற இயற்கை அனர்த்தங்களை உங்களால் பெயரிட முடியுமா?

இலங்கையில் பாரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்திய சில இயற்கை அனர்த்தங்களாக வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, இடிமின்னல், வரட்சி, சூறாவளி, சுனாமி, கடல் அரிப்பு, புயல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இவை இயற்கையாக நிகழ்வதால் இயற்கை அனர்த்தங்கள் எனப் பெயரிடப்பட்டாலும் இவை உருவாக மனிதச் செயற்பாடுகளும் காரணமாகின்றன. இவற்றை ஆபத்து நிலைமை எனக் கருதக் காரணம், இவை உயிரிழப்புகள் மற்றும் பயிர்செய்நிலங்கள், வாழும் சுற்றாடல் ஆகியவற்றுக்குப் பாதிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதாகும். இயற்கை அனர்த்தங்கள் உருவாவதைத் தடுக்க முடியாது. ஆனால், இவ்வனர்த்தங்கள் ஏற்படப் போவதை முன்கூட்டியே அறிந்து கொள்வதன் மூலம் பாதிப்புகளை ஓரளவு குறைத்துக்கொள்ளலாம்.



**உங்களுக்குத் தெரியுமா?**

சீனாவின் ஹய்வேன் நகரில் புவியதிர்வு ஏற்படப்போவதை முன்கூட்டியே அறிந்து கொண்டமையால், 1975 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஹய்வேன் நகரிலிருந்து இரண்டு மணிநேரத்தில் மக்கள் வெளியேற்றப்பட்டு பாரிய ஆபத்திலிருந்து காப்பாற்றப்பட்டனர். இப்புவியதிர்வின்போது 3 பேர் மட்டுமே உயிரிழந்தனர்.

## 8.1 வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கான விஞ்ஞானக் காரணிகள்

ஏரிகள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள் மிகக்குறைந்த நேரத்தில் அதிகளவு நீரைப்பெறும்போது, மேலதிக நீர் வெளியே வழிந்தோடுவதனால் வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது. ஆறுகள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள் அற்ற இடங்களில் சிறுமழை பெய்தாலும் அதிகளவு நீர் பாய்ந்தோடுகின்றது. இதனால், தரைப் பகுதி நீரினால் சூழப்பட்டு வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்றது.




இலவச விநியோகத்திற்காக

வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தும் பிரதான காரணி அதிகளவு மழை வீழ்ச்சியேயாகும். மேலும், சூறாவளி, புயல், புவியதிர்வு, மண்சரிவு, சுனாமி ஆகியனவும் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தும் நிகழ்வுகளாகும். இவை யாவும் குறைந்தளவு நேரத்தில் வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துகின்றன. சூரிய வெப்பக் கதிர்வீச்சால் பனிப்பாறைகள் உருகி, பெறப்படும் நீரினாலும் வெள்ளப் பெருக்கு ஏற்படலாம்.

**ஒப்படை 8.1**

தற்போது சில நகரங்களில் சிறுமழை பெய்தவுடனேயே வெள்ளம் பெருகுகின்றது. இதற்கான காரணங்கள் பற்றிக் கலந்துரையாடல் ஒன்றை நடாத்துங்கள்.

வெள்ளப் பெருக்கிற்கான நீண்டகாலக் காரணிகளான மனித நடவடிக்கைகள் சிலவற்றைக் கீழே தரப்பட்ட படங்கள் காட்டுகின்றன.



உரு 8.1 பயிர்ச்செய்கைக்காகவும் கட்டடங்கள் அமைப்பதற்காகவும் சரிவான நிலங்களை பயன்படுத்தல்



உரு 8.2 தாழ்ந்த நிலங்களை நிரப்புதல்



இலவச விநியோகத்திற்காக



உரு 8.3 நீரேந்து பிரதேசங்களிலுள்ள காடுகளை அழித்தல்



உரு 8.4 காடுகளுக்குத் தீ வைத்தல்

இயற்கையாக நீர் வழிந்தோடும் பிரதேசங்களில் தடை ஏற்படுத்துதல், உக்கலடைய முடியாத பொலித்தீன் பொருள்கள் மண்ணுடன் சேருதல் ஆகியவற்றாலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது.

**ஒப்படை 8.2**

இலங்கையின் தேசப்படமொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள். அடிக்கடி வெள்ளப் பெருக்கு ஏற்படும் இடங்களை நிறந் தீட்டுங்கள்.

## 8.2 வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தை எதிர்கொள்ளல்

ஏழாந்தர மாணவர்களுக்கான குழு ஒப்படை இங்கு தரப்பட்டுள்ளது.

''நீங்கள் வெள்ளப் பெருக்கு ஏற்படும் பிரதேசத்தில் வசிப்பவராயின், அதிகளவு மழைவீழ்ச்சியின்போது வெள்ளப் பெருக்கு ஏற்பட முன்பாக நீங்கள் மேற்கொள்ளும் முன்னாயத்தங்களை விரும்பிய முறையில் வகுப்பில் முன்வையுங்கள்.''

அரிஸ்டோட்டில் என்னும் மாணவர் குழு இவ்விடயம் தொடர்பாகப் பல விடயங்களை ஆராய்ந்து, கலந்துரையாடி, உருவாக்கிய குறுநாடகம் இங்கே தரப்படுகின்றது.

கீதா : அம்மா! என்ன செய்கிறீர்கள்? ஏன் பொருள்களைப் பொதி செய்கிறீர்கள்?

அம்மா : மகளே! நீங்கள் எங்கிருந்தீர்கள்? ஆற்றங்கரையோர மருதமர அடியிலிருந்த நீர்மட்டத்திலும் பார்க்கத் தற்போது நீர் மட்டம் உயர்ந்து வருவதாக ரபீக் மாமா சைக்கிளில் சென்று எல்லோருக்கும் அறிவித்து வருகின்றார். சென்ற வருடமும் இவ்வாறு நீர்மட்டம் உயர்ந்தது. எமது பிரதேசம் நீரில் மூழ்கியது பற்றி உமக்குத் தெரியாதா? அதுமட்டுமல்ல. எங்கள் பிரதேசத்திற்கு வெள்ள அபாயம் ஏற்படும் என்று வானொலியிலும் கூறுகின்றார்கள்.

கீதா : அம்மா, இன்று மின்சாரமில்லையே? நீங்கள் எவ்வாறு வானொலியில் செய்தி கேட்டீர்கள்?

அம்மா : பற்றரி (மின்கலங்கள்) ஐப் பயன்படுத்தி வானொலி கேட்டேன். மழைக்கு முன்பே எமது மின்சூள் விளக்கிற்கும் மின்கலங்கள் போட்டுத் தயாராக உள்ளேன்.

ரவி : அம்மா! அப்பா எங்கே?

அம்மா : அப்பா வெளியிலுள்ள பொருள்களை உள்ளே எடுத்து, பாதுகாப்பாக வைக்கின்றார். நீங்கள் சென்று அவருக்கு உதவி செய்யுங்கள். அங்குள்ள கொங்கிறீட் தூணுடன் மோட்டரை இறுக்கமாக இணைத்து வையுங்கள்.

ரவி : ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

அம்மா : வெள்ளம் பெருகி வந்தால் இப்பொருள்கள் யாவும் அடித்துச் செல்லப்படுமல்லவா?

கீதா : அம்மா! அதோ அந்த மாடி வீட்டுக்காரர் தங்கள் பொருள்களை மேல்மாடியில் கொண்டு போய் வைக்கிறார்.

ரவி : அம்மா! நான் நாயையும் பூனையையும் கொண்டு வருகிறேன். இன்று காலை முதல் அவற்றின் நடத்தைகள் வித்தியாசமாக உள்ளன.

அம்மா : அப்படியா? இயற்கையில் ஏற்படும் மாற்றங்களை உணரும் ஆற்றல் எங்களிலும் பார்க்க மிருகங்களுக்கு அதிகமாக உள்ளது. ஆகவே, நாம் விரைவாகச் செயற்படுவது நல்லதுதானே!

அப்பா : என்ன செய்கிறீர்கள்? தங்க நகைகள் எல்லாம் எங்கே? நேற்றே என்னிடம் தந்திருந்தால் ஏனைய ஆவணங்களுடன் பெரியண்ணா வீட்டில் வைத்திருக்கலாமல்லவா?

ரவி : எந்த ஆவணங்கள் அப்பா?

அப்பா : உயில், உறுதி, காப்புறுதிப் பத்திரங்கள், வங்கிச் சேமிப்புப் புத்தகங்கள், கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ்கள் ஆகிய ஆவணங்கள் மிக அவசியமானவை அல்லவா? மகளே! அத்தியாவசியப் பொருள்களை மட்டும் எடுத்துக்கொள்ளுங்கள். மின்சார உபகரணங்களின் செருகிகளை (குதையிலிருந்து) தொடுப்பகற்றி அவற்றை கொங்கிறீட் அலுமாரிமீது வையுங்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு அவசியமான உணவையும் மற்றும் தண்ணீர், மருந்துகள் சிலவற்றையும் எடுங்கள்.

அம்மா : உணவுமா?

அப்பா : ஆமாம்! நான் நேற்று வாங்கிய பிஸ்கட், மருந்து யாவற்றையும் எடுத்து வையுங்கள்.

கீதா : அம்மா! அடுத்த வீட்டு சில்வா மாமா கொழும்பு சென்றுள்ளார். அனுலா மாமியும் குட்டிக் குழந்தையும் தனியே இருக்கிறார்கள். அவர்களையும் கூட்டிச் செல்வோமா?

அம்மா : ஆம் மகளே! ஓடிப்போய் அவர்களுக்கும் இச் செய்தியைக் கூறி ஆயத்தமாகச் சொல்லுங்கள்.

ரவி : அதோ! அந்தச் சந்தியில் நிற்கும் தாத்தாவிற்கு யார் உதவப் போகிறீர்கள்?

அப்பா : ரகீம் மாமா அவரைக் கூட்டிச் செல்வதை நான் கண்டேன். மகளே! அந்தப் பெரிய மரக்குற்றியை எடுத்து வைத்தால் வெள்ளநீர் உள்ளே வருவது குறையுமல்லவா.

அம்மா : அதோ! அனுலா மாமி வருகிறார். பிரதான மின் ஆளியைத் தொடுப்பகற்றுங்கள். கதவைப் பூட்டி நாம் எல்லோரும் வெளியேறுவோம்.

அப்பா : நாங்கள் இப்போது கோவிலுக்குப் போவோம். பெரிய கற்பாறை மீது கோவிலிருப்பதால் அங்கு வெள்ள நீர் வரமுடியாது. வெள்ள நீர் வடியும்வரை அங்கிருப்போம். சிறு வெள்ளத்தினூடாகச் செல்லும்போது நீரின் ஆழத்தை அறிவதற்காக ஓர் தடியை முன்னால் நிலத்தில் வைத்து பார்த்தவாறு அவதானமாகச் செல்ல வேண்டும். உங்களில் யாராவது இடந் தவறினால் மாமாவுக்குத் தொலைபேசி மூலம் அறிவியுங்கள். அவரின் தொலைபேசி இலக்கம் எல்லோருக்கும் தெரியும்தானே!

அனுலா : நாம் எல்லோரும் எங்கள் காரில் போக முடியுமா?

அப்பா : அவ்வாறு போக முடியாது. ஓர் அடிக்கு மேல் வெள்ள நீர் வந்தால் அது காரை இழுத்துச் சென்று விடும். மேலுள்ள பாதையால் போவதுதான் எமக்குப், பாதுகாப்பு. யாராவது வள்ளம் வைத்திருந்தால் அதன் மூலமும் போகலாம்.

மீனாட்சி மாமி : எல்லோரும் இப்பத்தான் போகிறீர்களா? நான் மரவள்ளிக் கிழங்கு அவித்துக் கொண்டு கோவிலுக்குத்தான் போகிறேன். அங்கே சரியான சனக்கூட்டம்.

அம்மா : மீனாட்சி மாமி நீங்களும் எங்களோடு வாருங்கள்.

### ஒப்படை 8.3

மேற்பட்ட ஆபத்து நிலைமைகளின்போது வீட்டை விட்டு வெளியேறுகையில் எடுத்துச் செல்லும் அனர்த்தப் பொதியினுள் இருக்க வேண்டிய பொருள்கள் பற்றிக் கலந்துரையாடிப் பட்டியற்படுத்துங்கள்.
அம்மா, அப்பா, கீதா, ரவி, அனுலா, அவர்களின் செல்லப்பிராணிகள் ஆகியோர் இவ்வாறு வீட்டை விட்டு வெளியேறும் காட்சியைச் சித்திரமாக வரையுங்கள்.


இலவச விநியோகத்திற்காக

## வெள்ளப் பெருக்கின் பின்பு

வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பிரதேசங்களில் விநியோகிப்பதற்காகத் தயாரித்த அறிவுறுத்தற் கையேட்டில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் பின்வருமாறு:

- ♦ உங்களோடு உள்ள முதலுதவி மற்றும் வைத்திய உதவிகள் தேவைப்படுவோர் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
- ♦ பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் ஆலோசனையை பெற்றுக் கொள்ளாமல் கிணற்று நீர் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- ♦ அடிக்கடி வானொலிச் செய்திகளில் கவனம் செலுத்துங்கள்.
- ♦ வெள்ள நீரிலிருந்து விலகி இருங்கள் (இந்நீரில் எண்ணெய், சிறுநீர், மலம் ஆகியன கலந்திருப்பதுடன் மின் ஒழுக்கும் காணப்படலாம்).
- ♦ பாய்ந்தோடும் நீரிலிருந்து விலகியிருங்கள்.
- ♦ வெள்ளப் பெருக்கினால் பாதைகள் பழுதடைந்திருக்கக் கூடுமாதலால் வாகனங்களில் பிரயாணம் செய்வதில் கவனமாக இருங்கள்.
- ♦ மின்சாரக் கம்பிகள் சீர்குலைந்திருந்தால் அது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவியுங்கள்.
- ♦ வெள்ளப்பெருக்கின் பின்பு கட்டடங்களினுள்ளே செல்லும்போது காயம் விளைவிக்கக்கூடிய உடைந்த, கூரான பொருள்கள் மின்னொழுக்கு பற்றிக் கவனம் செலுத்துங்கள்
- ♦ வெள்ள நீரினால் நனைந்த உணவுப் பொருள்களை அகற்றுங்கள்.
- ♦ வெள்ள நீரைக் கையினால் அள்ள வேண்டிய நிலை ஏற்படின் பின்னர் சவர்க்காரம் பயன்படுத்திக் கைகளைக் கழுவுங்கள்.
- ♦ உணவுத் தயாரித்தல், பருகுதல் ஆகியவற்றின் பொருட்டு சூடாக்கிய நீரைப் பயன்படுத்துங்கள்.
- ♦ பழவகைகளையும் கீரைவகைகளையும் உப்புநீரினால் கழுவிப் பயன்படுத்துங்கள்.
- ♦ வெள்ளப் பெருக்கின் பின்பு ஏற்படக்கூடிய தொற்றுநோய்கள் பற்றி அவதானமாக இருங்கள். நெருப்புக் காய்ச்சல் (தைபொயிட்டு), வயிற்றுளைவு, கொலரா (வாந்திபேதி) ஆகியன அவ்வாறு ஏற்படக்கூடிய நோய்களாகும்.

**ஒப்படை 8.4**

வெள்ளப் பெருக்கின் பின்பு சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அறிவிக்கும் பொருட்டு, பொருத்தமான சுவரொட்டி அல்லது கையேடு ஒன்றைத் தயாரியுங்கள்.

# 8.2 மண்சரிவுடன் தொடர்புடைய அனர்த்தங்களால் ஏற்படும் பாதிப்புகளை இழிவளவாக்குதல்

## மண்சரிவு (Landslide)

இலங்கையில் மண்சரிவு எந்தளவுக்குப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது என்பதைத் தினந்தோறும் பத்திரிகைகள் வாயிலாகவும் ஏனைய தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

மலைச்சரிவுகளின் மேற்பரப்பிலுள்ள கற்களும் மண்திணிவும் சேறும் ஈர்ப்புவிசை காரணமாக பள்ளத்தை நோக்கி எடுத்துச் செல்லப்படுதல் மண்சரிவு எனப்படும். இது மிக மெதுவாகவோ அல்லது மிக வேகமாகவோ நடைபெறலாம் (உரு 8.5).



உரு 8. 5
இலங்கையில் ஏற்பட்ட ஒரு மண்சரிவு

மண்சரிவு மிக வேகமாக நடைபெற்று, ஒரு குடியிருப்புப் பிரதேசத்தில் உயிர் மற்றும் உடைமைகளுக்குச் சேதம் விளைவிக்கும்போது அது இயற்கை அனர்த்தமாகக் கொள்ளப்படும். இது இயற்கையாக நடைபெறும் நிகழ்வாக இருப்பினும் மனித நடவடிக்கைகளே இதற்கு மூல காரணமாக அமைகின்றன.

இலங்கையில் மண்சரிவு அனர்த்தத்துக்கு இலகுவாக உள்ளாகக் கூடிய எட்டு மாவட்டங்களாவன பதுளை, நுவரெலியா, கண்டி, களுத்துறை, கேகாலை, மாத்தளை, இரத்தினபுரி, மாத்தறை என்பன ஆகும்.

### மண்சரிவுக்கு முன்

நீங்கள் ஒரு சிறந்த அவதானிப்பாளராக இருந்தால் மண்சரிவுக்கு முன்னதாக அத்தகைய அபாயத்தை எதிர்நோக்கும் பிரதேசங்களில் சில மாற்றங்களை உங்களால் அவதானிக்கக்கூடியதாக இருக்கும். அத்தகைய பிரதேசங்களில் எச்சரிக்கையாக இருப்பது மிக முக்கியமானதாகும்.



உரு 8.6 இடிந்துவிழும் நிலையிலுள்ள வீடு ஒன்றின் தோற்றம்

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றின் போது வீடு ஒன்று தொடர்பாக இடம் பெற்ற கலந்துரையாடல் கீழே தரப்படுகின்றது. மண்ணில் புதையும் நிலையிலுள்ள வீடொன்றில் வசித்து வரும் குகன் குடும்பத்தினர் அவ் வீட்டிலிருந்து வெளியேறத் தீர்மானித்தனர். முப்பது வருடங்களுக்கு மேலாக இந்த வீட்டில் வசித்த குகன் கூறுகையில் "எமக்கு மிகவும் கவலையாக உள்ளது. நாம் இவ்வீட்டை வாங்கும்போது மலைச்சரிவில் மரங்கள் நிறைந்திருந்தன. ஆனால், அந்த இடத்தில் ஓர் உணவகத்தை நிர்மாணித்தபோது இந்த மரங்களை அழித்துவிட்டனர்'', என்றார்.

அறிவிப்பாளர்:- நீங்கள் இந்த வீட்டிலிருந்து வெளியேறத் தீர்மானித்ததற்கான காரணங்கள் யாவை?

குகன் :- முன்பு எமது வீட்டு முற்றம் அழகாக இருந்தது. இப்போது இங்கு வெடிப்புகள் தோன்றியுள்ளன. இவ்வாறான வெடிப்புகள் பல இடங்களில் தென்படுகின்றன. வீட்டின் தரையிலும் சுவரிலும் விரிசல்களும் சுவர்பூச்சுகளில் வெடிப்புகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. கதவு, யன்னல் சுரைகள் முன்னரை விட இறுக்கமாகக் காணப்படுகின்றன. இவற்றைப் பூட்டித் திறப்பதற்குக் கடினமாக உள்ளது. அதோ! அந்தச் சரிவிலுள்ள மரங்கள் யாவும் ஒரே பக்கமாகச் சாய்ந்துள்ளதைப் பாருங்கள். இந்த அறிகுறிகள் காரணமாக இப்பகுதி மண்சரிவுக்குள்ளாகும் என்பதை நாம் உணர்கின்றோம்.

அறிவிப்பாளர்:- மண்சரிவு அபாயம் பற்றி உறுதியாக அறிந்து கொண்டீர்களா?

குகன் :- ஆம், அறிந்து கொண்டோம். இங்கு அண்மையில் நிலத்திலிருந்து புதிதாக ஊற்றுகள் தோன்ற ஆரம்பித்துள்ளன. அதனால், நாங்கள் புவியியலாளரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டோம். உடனடியாக வீட்டிலிருந்து வெளியேறுவதே பொருத்தமானது என்று எமக்கு எச்சரிக்கை செய்தனர். எனவே, மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன் நாங்கள் வீட்டிலிருந்து வெளியேற உள்ளோம்.



இலவச விநியோகத்திற்காக


குகன் குடும்பத்தினர் இயற்கைச்சூழல் தொடர்பான விழிப்புணர்வுடன் இருந்தமையால் அனர்த்தத்திற்கு முன் அவற்றை அறிந்து செயற்படுவதற்கு அவர்களால் முடிந்தது. மண்சரிவு அபாயம் உள்ள பிரதேசங்களில் வாழ்பவராயின் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களாவன:

- தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை
- திடீரென ஏற்படும் பெருமழை (நீரூற்றுக்கள் உருவாதல்)
- வீட்டையண்டி வாழும் விலங்குகள், பறவைகளின் வழமைக்கு மாறான நடத்தைகள்

ஆறுகளுக்கு அண்மையில் வாழ்பவர்களாயின் ஆற்றில் திடீரென நீர்மட்டம் உயர்தல் அல்லது தாழுதல் அல்லது நீர் கலங்கிய நிலைக்கு மாறுதல் போன்ற அறிகுறிகள் தென்படும்போது அங்கிருந்து அப்பாற் சென்றுவிடுங்கள். இவ்வாறான மண்சரிவு அபாயமுள்ள சந்தர்ப்பங்களில் அவ்விடங்களிலிருந்து அப்பாற் செல்வதே பொருத்தமானதாகும். இவ்வாறு செல்வதற்கு ஏற்ற இடங்களாவன:


- இதற்கு முன் மண்சரிவு ஏற்படாத இடம்
- சரிவு குறைவான சமதளமான பிரதேசங்கள்

மண்சரிவு ஏற்படும்போது தப்பித்துக்கொள்ள அவகாசமில்லாத நிலைமைகளில் பந்து போன்று உடலைச் சுருட்டி அமர்ந்து தலைப் பகுதியைப் பாதுகாக்க முயற்சி செய்ய வேண்டும்.



**உங்களுக்குத் தெரியுமா?**

மூன்று நாட்களுக்கு தொடர்ந்து அல்லது அதற்குக் குறைந்த காலத்தினுள் 200 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி தொடர்ந்து இருக்குமாயின் அல்லது வருடம் முழுவதும் மழைவீழ்ச்சி இருக்குமாயின் மண்சரிவு அபாயம் ஏற்படலாம். இலங்கையில் மண்சரிவு ஏற்படுவதற்கான பிரதான காரணி மழைவீழ்ச்சியாகும்.



உரு 8.7 வட்டவளையில் ஏற்பட்ட மண்சரிவு

அவ்வாறான பாதிப்புகளின் பின்பு முதலுதவியும் வைத்திய சேவையும் தேவைப்படுவோருக்கு உடனடியாக அவற்றை வழங்குவதன் மூலம் பெறுமதி மிக்க உயிர்களைக் காப்பாற்றக்கூடியதாக இருக்கும்.

மண்சரிவின் பின்பு அப்பிரதேசங்களில் பொதுமக்களுக்கு துன்பங்களாக குடிநீர் தட்டுப்பாடு, உணவுத் தட்டுப்பாடு, பாதைகள் பழுதடைதல், வீடுகள் நிர்மூலமாதல், மின்சாரம் தடைப்படுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் வேண்டிய உதவிகள் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டும். அத்தகைய அவசர உதவிகள் சில இங்கே தரப்படுகின்றன.

- தூய்மையான நீர்
- வைத்தியசாலை வசதிகள், வைத்திய ஆலோசனைகள்
- உடைகள்
- உலர் உணவு
- சமைத்த உணவு
- பாய்கள்
- சுத்திகரிப்புப் பதார்த்தங்கள்

## குழு ஒப்படை

"மண்சரிவின் பின்" என்ற தலைப்பில் உங்கள் ஆக்கங்களுடன்கூடிய சிறிய கையேடொன்றைத் தயாரியுங்கள். (கவிதை, சிறுகதை, நாடகம், சித்திரம், படங்கள் ஆகியவற்றை உள்ளடக்குங்கள்).

## பயிற்சி

1. மண்சரிவு அல்லது வெள்ளப்பெருக்கு போன்ற திடீர் அனர்த்தத்தின்போது பாதிப்புக்குள்ளான,

    - உங்கள் குடும்பத்தினருக்காக
    - உங்கள் உறவினர்க்காக மற்றும் அயலவர்க்காக
    - இலங்கை மக்களுக்காக உங்களால் மேற்கொள்ளக் கூடியவற்றை பற்றிக் கலந்துரையாடி அறிக்கை ஒன்று தயாரிக்குக.

2. மாடிக்கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக தயார்ப்படுத்தப்பட்ட இடம் ஒன்றின் புகைப்படம் தரப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு சில காலத்திற்கு முன்பு பெருமளவு தாவரங்களையும் மரங்களையும் கொண்ட வனப்புமிக்க பிரதேசமாகும்.

    i. இங்கு காட்டப்பட்ட வேறுபாடுகளுக்கு காரணகர்த்தாவாக அமைந்தவர் யார்?

    ii. இவ் வேறுபாடு பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தைப்பற்றிக் கலந்துரையாடி சுருக்கமான அறிக்கை எழுதுக.



உரு 8.8